முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1298

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.04.2023, புதன்கிழமை

1. பிரம்ம ஞானியே அரங்கா வாழ்க
   பிரணவ சூட்சும ராஜனே வாழ்க
   சரவணச் சுடரேற்றி கலியுகத்தில்
   சற்குருவாய் விளங்கும் அரங்கனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 06 ம் நாள், 19.04.2023 புதன்கிழமை)
   தாழ்விலா அரங்கனின் சன்மார்க்கமே
   தரணிக்கு வேதமாக நின்று அருள்புரிய
3. அருளவே அரங்கனைத் தொடர்ந்து
   அகிலத்தார் வந்தால் போதும்
   இருள் என்கின்ற மாயை அனைத்தும் அகன்றோடி
   எல்லா திசையிலும் ஞான ஒளிபரவி இனிதே
4. இனிதே உலகோர்க்கு ஞானமெனும் சித்தி
   இலகுவாக அரங்கன் வழி உறுதியாகும்
   ஆகவே அரங்கனைத் தொடர்ந்துவர
   அன்பர்களுக்கு தயவு என்கின்ற மகா சக்தி
5. ஞானத்தின் திறவுகோளாக மாறி
   நம்பிக்கைபட அவரவர்க்கும் வாழ்வில் பெருமாற்றம்
   மாற்றம் அரங்கனால் நடந்தேறும்
   மக்களுக்கு ஞானிகளாகும் வாய்ப்பு உறுதியாகும்
6. ஆற்றல்பட அரங்கன் தர்மத்தையும் ஆதரித்து
   அகிலத்தார் அன்னதானம் பெருக்கினால்
   அவரவர்க்கும் உண்டான வினை நீக்கம் கூடி
   அகிலமெங்கிலும் தர்மவான்கள் என்கின்ற பலம் பெருகி

7. பெருகியே உலகம் பேரிடர் பிசிபிணி கொடுமை என்கின்ற பிரச்சினைகள்
ஏதுமில்லாத பாதுகாப்பாய் மாறி
வறுமையில்லாத வளமிக்க பூமியாக வள்ளல்தன்மை கொண்ட தர்மவான்கள்
வாழும் பூமியாக

ஆகவே உலகம் மாற்றம் கண்டு
அற்புதம் இந்த பேருலகம் காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—